தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com


RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்






| Vol: 02 | Issue: 104 | 4 Pages | 12.11.2024 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 104 | 4 பக்கங்கள் | 12.11.2024 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயஞ் செய்து விடல்**

**விளக்கம்:**
இன்னா செய்தவரைத் தண்டித்தல் அவரே நாணும் படியாக அவருக்கு நல்லுதவி செய்து அவருடைய தீமையையும் நன்மையையும் மறந்து விடுதலாகும்.

## சுப்ரீம் கோர்ட்டின் புதிய தலைமை நீதிபதியாக சஞ்சீவ் கன்னா பதவியேற்பு



புதுடெல்லி, நவ.12

சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதியாக இருந்த டி.ஒய். சந்திரசூட் நேற்று ஓய்வு பெற்றார். இதற்கிடையில், மிக மூத்த நீதிபதியான சஞ்சீவ் கன்னாவை அடுத்த தலைமை நீதிபதியாக நியமிக்க அவர் ஏற்கனவே சிபாரிசு செய்திருந்தார். அதை ஏற்று, புதிய தலைமை நீதிபதியாக சஞ்சீவ் கன்னாவை கடந்த மாதம் 24ந் தேதி மத்திய அரசு நியமித்தது.

இந்நிலையில், நாட்டின் 51வது தலைமை நீதிபதியாக சஞ்சீவ் கன்னா இன்று (திங்கட்கிழமை) பதவியேற்கிறார். ஜனாதிபதி மாளிகையில் நடக்கும் நிகழ்ச்சியில் அவருக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார். அடுத்த ஆண்டு (2025) மே 13ந் தேதி வரை சஞ்சீவ் கன்னா பதவியில் இருப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1960ம் ஆண்டு டெல்லியில் பிறந்தவர், நீதிபதி சஞ்சீவ் கன்னா. 1983 ம் ஆண்டு டெல்லி பார் கவுன்சிலில் வழக்கறிஞராக பதிவு செய்து கொண்ட சஞ்சீவ் கண்ணா மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் வழக்கறிஞராக இருந்தார். 2004ம்ஆண்டுடெல்லிஅரசின்வழக்கறிஞராகவும்(சிவில்)நியமிக்கப்பட்டார். டெல்லி ஐகோர்ட்டின் கூடுதல் நீதிபதியாக கடந்த 2005ம் ஆண்டு சஞ்சீவ் கண்ணா நியமிக்கப்பட்டார். இவர், கடந்த 14 ஆண்டுகள் பல்வேறு ஐகோர்ட்களில் நீதிபதியாக பணியாற்றி உள்ளார்.

## குளிர்காலம் வருவதால் குழந்தை ராமருக்கு பஷ்மினா சால்வைகள் அணிவிக்க முடிவு



அயோத்தி, நவ.13

உத்தர பிரதேச மாநிலம் அயோத்தியில் கடவுள் ராமருக்கு கோவில் கட்டப்பட்டுள்ளது. இந்தக் கோவிலில் கடந்த ஜனவரி மாதம் ஸ்ரீ பால ராமர் சிலை பிரதிஷ்டை நடைபெற்றது. ஜனவரி மாதம் முதல் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் ஸ்ரீ பால ராமரை தரிசனம் செய்து வருகின்றனர்.

இந்தக் கோவிலில் ராமர் குழந்தை வடிவமாக காட்சியளிக்கிறார். அவருக்கு சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப உடைகளை அணிவிக்க கோவில் நிர்வாகம் சார்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி, குளிர்காலத்தின் அகான் மாதம் 20ம் தேதி தொடங்குகிறது.

இந்த மாதம் முதல் குழந்தை ராமரை கதகதப்பாக வைக்கும் வகையில் க்வில்ட்ஸ், பஷ்மினா சால்வைகள் மற்றும் இதர டிசைனர் உடைகளை உடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் குழந்தை ராமருக்கு நைவேத்யமாக உலர் பழங்கள் படைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## சுப்ரீம் கோர்ட்டின் தலைமை நீதிபதியாக சஞ்சீவ் கன்னா பதவியேற்பு



புதுடெல்லி, நவ.12

சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதியாக இருந்த டி.ஒய்.சந்திரசூட் நேற்று ஓய்வு பெற்றார். இதற்கிடையில், மிக மூத்த நீதிபதியான சஞ்சீவ் கன்னாவை அடுத்த தலைமை நீதிபதியாக நியமிக்க அவர் ஏற்கனவே சிபாரிசு செய்திருந்தார். அதை ஏற்று, புதிய தலைமை நீதிபதியாக சஞ்சீவ் கன்னாவை கடந்த மாதம் 24ந் தேதி மத்திய அரசு நியமித்தது.

இந்நிலையில், சுப்ரீம் கோர்ட்டின் 51வது தலைமை நீதிபதியாக சஞ்சீவ் கன்னா இன்று பதவியேற்றுக் கொண்டார். ஜனாதிபதி மாளிகையில் நடந்த நிகழ்ச்சியில் அவருக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். சஞ்சீவ் கன்னா அடுத்த ஆண்டு (2025) மே 13ந் தேதி வரை பதவியில் இருப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதவியேற்பு நிகழ்ச்சியில் துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர், பிரதமர் மோடி, ஓய்வு பெற்ற நீதிபதி சந்திரசூட் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். சஞ்சீவ் கன்னா கடந்த 14 ஆண்டுகள் பல்வேறு ஐகோர்ட்களில் நீதிபதியாக பணியாற்றி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உத்தரபிரதேசம்: ஓடும் ரெயிலில் திடீரென புகை வந்ததால் பரபரப்பு

லக்னோ, நவ.12

டெல்லியில் இருந்து உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜ் நோக்கி உஞ்சாஹர் எக்ஸ்பிரஸ் ரெயில் சென்று கொண்டிருந்தது. அந்த ரெயில், உத்தரபிரதேச மாநிலம் எடாவா ரெயில் நிலையம் அருகே சென்றபோது ஒரு பெட்டியில் ஒரு பயணியின் பையில் இருந்து திடீரென புகை வரத் தொடங்கியது.

பீதியடைந்த பயணிகள் உடனடியாக ரெயில்வே போலீஸ் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்தனர். அங்கிருந்து தகவல் கிடைத்து, ரெயில்வே போலீசாரும், ரெயில்வே பாதுகாப்பு படையினரும் பரூகாபாத் ரெயில் நிலையம் அருகே ரெயிலை தடுத்து நிறுத்தினர். புகை வந்த பெட்டியில் ஏறி சோதனை நடத்தினர். அதற்குள் பயணிகள் தீயணைப்பு சாதனம் மூலம் புகையை அணைத்து விட்டனர்.

ஒரு பயணியின் பையில் இருந்த தீப்பெட்டி பாக்கெட்டுகள் உரசிக்கொண்டதால் புகை வந்தது கண்டறியப்பட்டது. அவரை விசாரணைக்காக ரெயிலில் இருந்து இறக்கி போலீசார் அழைத்துச் சென்றனர்.

# ஆணவ பேச்சால் தொடர் தோல்விகளை சந்திக்கும் எடப்பாடி பழனிசாமி; முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



விருதுநகர், நவ.12

விருதுநகரில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 2 நாட்கள் கள ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, விருதுநகர் விழாவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பேசியதாவது:

ஏழை எளிய மக்களுக்காக எண்ணற்ற திட்டங்களை தி.மு.க. அரசு செயல்படுத்தி வருகிறது. அதனை இந்த மேடையில் மணிக்கணக்கில் என்னால் சொல்ல முடியும். தமிழர்களின் வீர விளையாட்டான அரங்கம் அமைத்தது பயனற்ற திட்டமா? மதுரையில் மாணவமாணவிகள் கல்வியாளர்கள் பயன்படுத்தும் வகையில் கலைஞர் நூலகம் அமைத்தது பயனற்ற திட்டமா? கிண்டியில் சிறப்பு மருத்துவமனை அமைத்து பயனற்ற திட்டமா? தமிழகம் முழுவதும் 1 கோடியே 20 லட்சம் பெண்களுக்கு ரூ.1000 கலைஞர் மகளிர் உரிமை தொகை வழங்குவது பயனற்ற திட்டமா? இதில் எதை சொல்கிறார் எடப்பாடி பழனிசாமி.

இப்படி வாய்தொடுக்காகவும் ஆணவத்துடன் பேசி பேசித்தான் தொடர்ந்து தோல்விகளை சந்தித்து வருகிறீர்கள். நான் உறுதியாக சொல்கிறேன். உங்கள் ஆணவத்திற்காக தான் இனிமேல் தமிழக மக்கள் உங்களை தோற்கடித்து கொண்டே இருப்பார்கள்.

தமிழக மக்கள் மனதில் கலைஞர் தவிர்க்க முடியாதவர். அவரது கொள்கைகளையும், சிந்தனைகளையும் செயல்படுத்தி வருகிறேன்.

கலைஞர் பிள்ளை என்பது மட்டுமல்லாமல் அவரது தொண்டனாகவும் வாழ்ந்து வருவதில் பெருமிதமடைகிறேன். அவரது புகழ் வெளிச்சம் இந்தியா முழுவதும் வீசுகிறது. அந்த வெளிச்சம் எடப்பாடியின் கண்களை கூச செய்கிறது.

எப்போதும் உங்களுக்கு உறுதுணையாக உங்களின் வாழ்க்கைக்கும், வளர்ச்சிக்கும் ஒரு சேவகனாக எனது பணிகள் தொடரும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# 2026ம் ஆண்டில் விஜயை முதலமைச்சர் ஆக்க கடுமையாக உழைக்கவேண்டும் புஸ்ஸி ஆனந்த்



விழுப்புரம், நவ.11

விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரம் வட்டம் அரங்கண்டநல்லூர் பகுதியில் தென்பெண்ணை ஆறு ஓடுகிறது. இப்பகுதியில் இரவு நேரங்களில் சட்டத்துக்குப் புறம்பாக மணல் கொள்ளையர்கள் இரு சக்கர வாகனத்தில் மணல் எடுத்துச் செல்வதாக கூறப்பட்ட வந்த நிலையில் 09112024 அன்று இரவு மூட்டைகள் மூலம் இருசக்கர வாகனத்தில் எந்தவித பயமோ பதற்றமோ இல்லாமல் மணலை எடுத்துச் செல்கின்றனர்.

இவர்கள் 5கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்களை எடுத்து வந்து 100 க்கு மேற்பட்ட மூட்டைகளில் மணல் எடுத்துச் சென்று அருகே உள்ள கிராமத்தில் சேர்த்து வைத்து பிறகு தங்கள் பகுதிக்கு எடுத்து சென்று அதனை வியாபாரம் செய்வதாக கூறப்படுகிறது 9 மூட்டைகள் 4000 ரூபாய் வரை விற்கப்படுவதாகவும், இதனால் மாதத்தில் லட்சத்திற்கு மேல் சம்பாதிப்பதாக கூறப்படுகிறது. இதற்கு சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உடந்தையாக இருக்கலாம் எனவும், இதுபோன்ற மணல் கொள்ளையர்கள் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன் எனவும் சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

ஆற்றில் மணல் எடுப்பதால் நீர் வளம் குறைந்து நீர் பற்றாக்குறை ஏற்பட்டு குடிநீர் பற்றாக்குறை மற்றும் விவசாயம் பாதிக்கும் நிலை ஏற்படும் எனவே இனியாவது சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மணல் கொள்ளையர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து மணல் கொள்ளையை தடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் வைத்துள்ளனர்.

# வெளிப்படைத்தன்மையுடன் அறிக்கை வழங்குக: எடப்பாடி பழனிசாமி



சென்னை, நவ.12

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் 'கள ஆய்வு' குழுவினரின் ஆலோசனை கூட்டம் இன்று நடைபெற்றது. ஆலோசனை கூட்டத்தில் கே.பி.முனுசாமி, திண்டுக்கல் சீனிவாசன், வேலுமணி, தங்கமணி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு..க தலைமை அலுவலகத்தில் உள்ள எம்.ஜி.ஆர். மாளிகையில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் இன்று காலை 10 மணிக்கு 'கள ஆய்வுக்குழு' ஆலோசனை கூட்டம் தொடங்கி நடைபெற்றது. இந்த ஆலோசனை கூட்டத்திற்கு பிறகு, கட்சியில் அமைப்பு ரீதியாக செயல்பட்டு வரும் அனைத்து மாவட்ட வாரியாக, கிளை, வார்டு, வட்ட கழகம் மற்றும் சார்பு அமைப்புகளின் செயல்பாடுகளை இந்த குழு நேரடியாக ஆய்வு செய்ய உள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் உட்கட்சி செயல்பாடுகள் குறித்து வெளிப்படைத் தன்மையுடன் அறிக்கை வழங்க வேண்டும் என்று அ.தி.மு.க. களஆய்வுக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவுறுத்தி உள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறுகையில், "2026 சட்டமன்றத் தேர்தல் பணிகளில் கடமை உணர்வோடு பணியாற்ற வேண்டும். மாவட்ட செயலாளர்கள் மீது தவறு இருந்தால்கூட, அதனை அறிக்கையாக தாக்கல் செய்ய வேண்டும். மாவட்ட செயலாளர்கள் மீது தவறு இருந்தால் ஆய்வு அறிக்கையை வைத்து அப்பகுதியில் நிர்வாகிகள் மாற்றப்படுவார்கள்.

அ.தி.மு.க. கள ஆய்வு குழுவினர் அளிக்கும் அறிக்கை அடிப்படையிலேயே புதிய பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுவர். அ.தி.மு.க.வில் அமைக்கப்பட்ட கள ஆய்வு குழு டிச.7ந்தேதிக்குள் அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும். மாவட்டங்கள் மற்றும் தொகுதிகளில் ஆய்வு செய்து கட்சியின் செயல்பாடுகள் எவ்வாறு உள்ளது என கூற வேண்டும். பாரபட்சம் பார்க்காது அனைத்து நிர்வாகிகளையும் சந்தித்து ஒவ்வொரு மாவட்டத்திலும் கட்சி பணி குறித்து ஆய்வு செய்ய வேண்டும்" என்று எடப்பாடி பழனிசாமி கூறினார்.

# நடிகை கஸ்தூரி முன் ஜாமீன் கோரி ஐகோர்ட்டில் மனு தாக்கல்

மதுரை, நவ.12

கடந்த சில தினங்களுக்கு முன்பாக இந்து மக்கள் கட்சி சார்பில் சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் பங்கேற்று பேசிய நடிகை கஸ்தூரி, தெலுங்கு பேசும் மக்கள் குறித்து கூறிய கருத்து சர்ச்சையானது. இதையடுத்து, தனது கருத்துக்கு கஸ்தூரி மன்னிப்பு கோரினார். எனினும் மதுரை, ஆண்டிபட்டி போன்ற பகுதிகளில் உள்ள காவல் நிலையங்களில் கஸ்தூரி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதேபோல், அகில இந்திய தெலுங்கு சம்மேளன அமைப்பு சார்பில் நடிகை கஸ்தூரி மீது அளித்த புகாரின் அடிப்படையில், கலவரத்தை தூண்டுதல் உட்பட நான்கு பிரிவுகளின் கீழ், சென்னை எழும்பூர் காவல் நிலையத்தில் கஸ்தூரி மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. நடிகை கஸ்தூரி தலைமறைவாக இருப்பதாக சொல்லப்படுகிறது. கஸ்தூரியை தனிப்படை போலீசார் இரண்டாவது நாளாக தேடி வரும் நிலையில், அவர் ஐதராபாத்திற்கு அவ்வப்போது சென்று வந்ததால் அங்கு இருக்கலாம் என்ற கோணத்திலும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இதனிடையே, முன் ஜாமீன் கோரி ஐகோர்ட்டு மதுரை கிளையில் கஸ்தூரி மனு தாக்கல் செய்துள்ளார். உள்நோக்கத்தோடு தன் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாக கஸ்தூரி தனது முன் ஜாமீன் மனுவில் குறிப்பிட்டுள்ளார். கஸ்தூரி தாக்கல் செய்த முன் ஜாமீன் மனு, நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன்பு இன்று விசாரணைக்கு வருகிறது.



மதுரை உசிலம்பட்டி அருகே முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயக்குமாரை தாக்க முயற்சி செய்யப்பட்டார். உடன் வந்த அதிமுக நிர்வாக தினேஷ்குமார் மீது நடத்திய தாக்குதலில் அவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதி தாக்குதலில் ஈடுபட்டவர்கள் அமமுக நிர்வாகிகள் என கூறப்படும் நிலையில், இச்சம்பவம் தொடர்பாக பேரையூர் டிஎஸ்பி சித்ரா தேவி தலைமையிலான போலீசார் தொடர் விசாரணை என தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக மீனவர்கள் 23 பேர் சிறைபிடிப்பு இலங்கை கடற்படை நடவடிக்கை



மண்டபம், நவ.12

ராமேசுவரம் மற்றும் சுற்று வட்டார பகுதியை சேர்ந்த மீனவர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் நேற்று நூற்றுக்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீன்துறை அலுவலக அனுமதியுடன் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். இவர்களில் ஒரு தரப்பினர் இந்தியஇலங்கை கடல் எல்லையை ஒட்டியுள்ள நெடுந்தீவு அருகே இன்று அதிகாலை வலைகளை விரித்து மீன்பிடித்து கொண்டிருந்தனர்.

அப்போதுகுட்டிரோந்து கப்பல்களில் அங்கு வந்த இலங்கை கடற்படையினர் இந்த பகுதியில் மீன்பிடிக்க அனுமதி இல்லை. எனவே இங்கிருந்து செல்லுங்கள் என மீனவர்களை எச்சரித்தனர். உடனடியாக 10க்கும் மேற்பட்ட படகுகளில் இருந்த மீனவர்கள் அவசரம், அவசரமாக கடலில் விரித்திருந்த வலைகளை சுருட்டிக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டனர்.

ஆனாலும் இலங்கை கடற்படை வீரர்கள் அத்துமீறி ராமேசுவரம் மீனவர்களின் படகுகளில் தாவிக்குதித்து அவர்கள் பிடித்து வைத்திருந்த விலை உயர்ந்த மீன்களை பறித்துக்கொண்டனர். அத்துடன் மீன்பிடி உபகரணங்களையும் சேதப்படுத்தினர். தொடர்ந்து மீனவர்களை தாக்கி இங்கிருந்து செல்லுமாறு விரட்டி அடித்தனர்.

இதனால் பீதியடைந்த மீனவர்கள்மீன்பிடிப்பதை பாதியிலேயே விட்டு விட்டு கரைக்கு புறப்பட்டனர். அப்போது எல்லை தாண்டி வந்து மீன் பிடித்தாக கூறி ராஜா, கீதன், சகாயராஜ், ஆகியோருக்கு சொந்தமான மூன்று மீன்பிடி விசைப்படகுகளையும், அதிலிருந்து டைட்டஸ், சரவணன், ஜெரோம், யாக்கோபு உள்ளிட்ட 23 ராமேசுவரம் மீனவர்களை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்து கைது செய்தனர். மேலும் அவர்களின் விசைப்படகுகளையும் பறிமுதல் செய்து அதனை தங்களது ரோந்து கப்பலில் கட்டி இலங்கைக்கு கொண்டு சென்றனர்.

பின்னர் அவர்கள் இலங்கை காங்கேசன் கடற்படை முகாமிற்கு அழைத்து செல்லப்பட்டனர். அங்கு அவர்களிடம் விசாரணை நடத்திய இலங்கை கடற்படை மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்தில் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். தொடர்ந்து அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இன்று விடுமுறை என்பதால் நாளை கோர்ட்டில் ஆஜர்படுத்தப்படும் அவர்கள் விடுதலை ஆவார்களா? அல்லது சிறையில் அடைக்கப்படுவார்களா? என்பது தெரியவரும்.

இந்நிலையில் இலங்கையில் பாராளுமன்ற பொது தேர்தல் வரும் நாம் 14ஆம் தேதி நடைபெற உள்ளதால் ஒரே இரவில் 23 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படை சிறை பிடித்து சென்றதாக மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களை உடனடியாக படகுடன் விடுதலை செய்ய வேண்டும், இலங்கையில் புதிதாக பொறுப்பேற்றுள்ள ஜனாதிபதி மீனவர் பிரச்சனைக்கு நிரந்தரதீர்வுகாணநடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர் சங்கங்கள் வலியுறுத்தி உள்ளன.

கடந்த 29ந்தேதி கொழும்புவில் நடைபெற்ற இரு நாட்டு மீன்வளத்துறை அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தையில் மீனவர்கைதுநடவடிக்கையை தடுத்து நிறுத்த வேண்டும் என இந்திய சார்பில் கோரிக்கை வைத்ததாக தகவல் வெளியான நிலையில் மீண்டும் 23 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்துள்ளது வேதனை அளிப்பதாக ராமேசுவரம் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

# அவதூறு பேச்சு: இந்து மக்கள் கட்சி தலைவர் அர்ஜுன் சம்பத்தின் மகன் கைது



கோவை, நவ.12

கோவை தெற்கு தாலுகா அலுவலகம் முன்பு கடந்த 27ந் தேதி ஈஷா யோகா மையத்துக்கு எதிராக அவதூறு பரப்புபவர்களை கண்டித்து இந்து மக்கள் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டத்தில் இந்து மக்கள் கட்சி தலைவர் அர்ஜுன் சம்பத், அவரது மகனும், இந்து மக்கள் கட்சி மாநில இளைஞர் அணி தலைவருமான ஓம்கார் பாலாஜி உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர்.

ஓம்கார் பாலாஜி பேசுகையில் நக்கீரன் கோபால் பற்றி அவதூறாக பேசியதாக கூறப்படுகிறது. இது பற்றி அப்துல்ஜலீல் என்பவர் கோவை ரேஸ்கோர்ஸ் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார்.

அதன்பேரில் ஓம்கார் பாலாஜி மீது ரேஸ்கோர்ஸ் போலீசார் பொது அமைதிக்கு குந்தகம் ஏற்படுத்துதல், குற்றநோக்கத்துடன் செயல்படுதல் ஆகிய 2 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர்.

இந்தநிலையில் கெம்பட்டி காலனியில் உள்ள ஓம்கார்பாலாஜி வீட்டுக்கு போலீசார் சென்றனர். அங்கிருந்த அவரை போலீசார் கைது செய்தனர். பின்னர் ரேஸ்கோர்ஸ் போலீஸ் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டு அவரிடம் விசாரணை நடந்தது.

ஓம்கார் பாலாஜி கைது செய்யப்பட்ட சம்பவத்துக்கு அர்ஜுன்சம்பத் கண்டனம் தெரிவித்துள்ளார். இதற்காக போலீசாரை கண்டித்து இந்து மக்கள் கட்சிசார்பில் போராட்டம் நடத்தப்படும் என அவர் அறிவித்துள்ளார்.

# 234 தொகுதிகளிலும் பொறுப்பாளர்களை நியமித்து தேர்தல் பணியை தொடங்க வேண்டும் பிரேமலதா



சென்னை, நவ.12

கோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க. அலுவலகத்தில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா தலைமையில் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

★ தே.மு.தி.க. நிறுவனத் தலைவர் விஜயகாந்த் மறைந்து வருகிற 28ந் தேதியுடன் ஓராண்டு நிறைவு பெறுகிறது. இதற்கு ஆண்டு தோறும் அஞ்சலி செலுத்துவோம்

★ கள்ளச்சாராயம் விற்பனை செய்யும் நபர்கள் மீது கடுமையான சட்டங்கள் கொண்டுவர வேண்டும். மதுக்கடைகளை நிரந்தரமாக மூடி, பூரண மது விலக்கை அமுல்படுத்த வேண்டும்.

★ கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமையை தடுக்கும் விதத்தில் மத்திய, மாநில அரசுகள் கடுமையான சட்டத்தால் தடுத்து நிறுத்த உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ சென்னையிலும், மற்ற மாவட்டங்களிலும் மழை பாதிப்பை தடுக்க போர்க்கால அடிப்படையில் திட்டங்களை தீட்டி, சாலைகள் மற்றும் போக்குவரத்தை திறம்பட செயல்படுத்த வேண்டும்.

★ தமிழகத்தில் சொத்து வரியை உடனே திரும்ப பெற வேண்டும்.

★ கர்நாடக அரசு மேகதாதுவில் அணை கட்ட ஏற்பாடுகள் செய்வதை கைவிட்டு விட்டு, ராசிமணல் என்ற இடத்தில் அணை கட்டினால் இரண்டு மாநிலமும் நீர் வசதி பெறும்.

★ உயர்த்திய மின் கட்டணத்தை திரும்பப் பெற வேண்டும்.

★ ஆட்சி பலம், அதிகார பலம், பண பலம் ஆகியவற்றை எதிர்கொண்டு, வர

இருக்கின்ற உள்ளாட்சி தேர்தல்கள் மற்றும் 2026 சட்டமன்றத் தேர்தலுக்கானவியூகத்தைஅமைத்து 234 தொகுதிகளிலும் சட்டமன்ற பொறுப்பாளர்களை நியமித்து தேர்தலுக்கான பணிகளை உடனடியாக தொடங்கிட வேண்டும் என்றும், நம் தமிழ்நாட்டிற்காகவும், தமிழக மக்களுக்காகவும் கேப்டன் கொண்ட லட்சியத்தை நிறைவேற்றிட வேண்டும் என உறுதியேற்று தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

இவ்வாறு தே.மு.தி.க. கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற ரூ.60 லட்சம் மதிப்பிலான பீடி இலை பண்டல்கள் பறிமுதல்



தூத்துக்குடி, நவ.12

தூத்துக்குடி புதிய துறைமுகம் அருகே கோவலம் கடற்கரை பகுதியில் முட்புதருக்குள் பீடி இலைகள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாககடலோரகாவல் படை போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதைத்தொடர்ந்து இன்ஸ்பெக்டர் பேச்சிமுத்து, சப்இன்ஸ்பெக்டர் ரென்னீஸ் தலைமையிலான போலீசார் அங்கு விரைந்து சென்று சோதனை செய்தனர்.

அப்போது முட்புதருக்குள் ஏராளமான மூட்டைகள் பதுக்கி வைக்கபட்டிருந்தன. அவற்றை போலீசார் பறிமுதல் செய்து சோதனை நடத்தினர். இதில் மொத்தம் 2 டன் எடை உள்ள பீடி இலைகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

மதுரையில் இருந்து இந்த பீடி இலை பண்டல்கள் கொண்டு வரப்பட்டு இலங்கைக்கு கடத்தி செல்வதற்கு பதுக்கி வைக்கப்பட்டிருப்பது தெரியவந்தது.

இவற்றின் மொத்த மதிப்பு ரூ.60 லட்சம் என போலீசார் தெரிவித்தனர். பறிமுதல் செய்யப்பட்ட பீடி இலை பண்டல்களை சுங்கத்துறை அதிகாரிகளிடம்ஒப்படைக்ககடலோர காவல்படை போலீசார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். மேலும் இந்த பீடி இலை பண்டல்களை கடத்தி வந்தவர்கள் யார்? என்ற கோணத்திலும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சொகுசு காரில் கடத்தி வந்த 3 லட்சம் மதிப்பிலான 1 டன் குட்கா பறிமுதல்



வெள்ளிச்சந்தை, நவ.12

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு புதிய தேசிய நெடுஞ்சாலை வழியாக கர்நாடாவில் இருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட குட்கா, பான்மசாலா பொருட்களை கடத்துவதாக பாலக்கோடு டி.எஸ்.பி. மனோகரனுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அவரது உத்தரவின் பேரில், போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் ரவிச்சந்திரன் தலைமையில் மகேந்திரமங்கலம் போலீசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, அவ்வழியாக வேகமாக வந்த இன்னோவா சொகுசு காரை போலீசார் நிறுத்த கூறினர். போலீசாரை கண்டதும் காரை நிறுத்தி விட்டு காரில் இருந்தவர் தப்பி ஓடி தலைமறைவாகினர்.

போலீசார் காரை சோதனை செய்ததில் அதில் சுமார் 40 மூட்டைகளில் 3 லட்சம் ரூபாய் மதிப்பிலான 1 டன் குட்கா கடத்தி வந்தது தெரிய வந்தது.

அதனை தொடர்ந்து 8 லட்சம் ரூபாய் மதிப்பிலான சொகுசு காரை குட்கா மூட்டைகளுடன் பறிமுதல் செய்தனர்.

இது குறித்து போலீசார் வழக்குபதிவு செய்துதப்பி ஓடி தலைமறைவானர்வர்களை தேடி வருகின்றனர்.

பறிமுதல்செய்யப்பட்ட குட்கா பொருட்களை பார்வையிட்ட டி.எஸ்.பி மனோகரன் கூறுகையில் தொடர்ந்து குட்கா பொருட்கள் கடத்தல் குறித்து தீவிர சோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், குட்கா கடத்துபவர்கள் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்படுவார்கள் என எச்சரித்துள்ளார்.

# மெட்ரோ ரெயில் சுரங்க பணியில் திடீர் வாயு கசிவால் பரபரப்பு ஆபத்தை ஏற்படுத்துமா? என அதிகாரிகள் ஆய்வு



சென்னை, நவ.12

சென்னைமெரினாகடற்கரை கலங்கரை விளக்கத்தில் இருந்து பூந்தமல்லி வரையில் ரூ.63 ஆயிரத்து 246 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் மெட்ரோ பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதன்படி கலங்கரை விளக்கத்தில் இருந்து திருமயிலை வரையில் பூமிக்கு அடியில் சுரங்கப்பாதை பணிகள்நடைபெற்று வருகிறது.

18 மீட்டர் ஆழத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த பணிகள் கச்சேரி சாலை வழியாக சாந்தோம் கிறிஸ்தவ ஆலயத்தை தாண்டி நடைபெற்ற போது மீத்தேன் எரிவாயு கசிவு ஏற்பட்டுள்ளது.

கார்பன் மோனாக்சைடு வாயு கசிவும் ஏற்பட்டது போன்ற உணர்வு ஏற்பட்டு உள்ளது. இதையடுத்து அப்பகுதியில் மெட்ரோ சுரங்கப் பணிகள் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து இந்த வாயு கசிவு ஆபத்தை ஏற்படுத்துமா? என்பது பற்றி அதிகாரிகள் ஆய்வு செய்துள்ளனர்.

இதுபற்றி மெட்ரோஅதிகாரிகள் கூறும்போது, இந்த கியாஸ் கசிவு ஆபத்தானது அல்ல என்றும் அதனை சரி செய்வதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறோம் என்றும் தெரிவித்து உள்ளனர்.

இதுபற்றி சுற்றுச்சூழல் ஆர்வலர்கள்கூறும்போது, காற்றில்லா நிலைகளில்தான் எரியும் தன்மை கொண்ட மீத்தேன் உருவாகும். கரிமப் பொருட்கள் ஏற்கனவே இருந்த இடங்களிலேயே மீத்தேன் உருவாக வாய்ப்புகள் உள்ளன.

இப்படி மீத்தேன் இருக்கும் இடத்தில் கார்பன் மோனாக்சைடு வாயு உருவாவதற்கான வாய்ப்புகள் குறைவாகும் என்று தெரிவித்துள்ளனர்.

இந்த வாயு கசிவு பிரச்சனையை சரிசெய்து மெட்ரோ ரெயில் பணிகளை மீண்டும் தொடங்க அதிகாரிகள் முடிவு செய்து உள்ளனர்.

# காட்டுப்புத்தூர் அருகே வாலிபர் கொலையில் 2 பேர் கைது



தொட்டியம், நவ.12

திருச்சி மாவட்டம் காட்டுப்புத்தூர் அருகே உள்ள சீத்தப்பட்டி டாஸ்மார்க் கடை அருகேஉள்ளபாலத்தின் அடியில் 30 வயது மதிக்கத்தக்க ஆண் பிணம் கிடப்பதாக காட்டுப்புத்தூர் கிழக்கு கிராம நிர்வாக அலுவலர் பாரதிக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து அவர் காட்டுப்புத்தூர் போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் விரைந்து வந்து பிணமாக கிடந்தவரின் உடலை கைப்பற்றி தீவிர விசாரணை மேற்கொண்டனர். அப்போது இறந்து போனவர் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் கஸ்தூரிபாய் புரம், கோவில் தெரு காமாட்சி மகன்பாலகிருஷ்ணன் (வயது 24) என தெரியவந்தது.

மேலும் விசாரணை மேற்கொண்டதில் பாலகிருஷ்ணன் கொலை செய்யப்பட்டு வீசப்பட்டது தெரியவந்தது. பாலகிருஷ்ணனும், அவரது நண்பர் அதே ஊரைச் சேர்ந்த ரமேஷ் (38) ஆகிய இருவரும் கரூர் அருகே உள்ள மோகனூரில் தங்கி பர்னிச்சர் வேலை செய்து வந்தனர். இருவருக்கும் குடிப்பழக்கம் இருந்து வந்தது. சம்பத்தன்று 2 பேரும் மோகனூர் டாஸ்மாக் கடையில் மது அருந்தி உள்ளனர்.

அப்பொழுது அவர்கள் அருகே தேனி மாவட்டம் பெரியகுளம் பகுதியை சேர்ந்த 8 பேர் கொண்ட கும்பல் மது அருந்தி உள்ளனர். இரு தரப்பினரும் பேசிக் கொண்டிருந்த பொழுது அவர்களுக்கிடையே தகராறு ஏற்பட்டது. இதில் பாலகிருஷ்ணன் மற்றும் ரமேஷை அந்த கும்பல் சரமாரியாக தாக்கினர். பின்பு அவர்கள் இருவரையும் இருசக்கர வாகனத்தில் ஏற்றிக் கொண்டு காட்டுப்புத்தூர் அருகே உள்ள சீத்தப்பட்டி டாஸ்மார்க் கடை அருகே உள்ள பாலத்தில் இறக்கி விட்டு சென்றனர். இதில் பலத்த காயமடைந்த பாலகிருஷ்ணன் பாலத்தின்கீழ் சென்று மயங்கி விழுந்து இறந்தார். ரமேஷ் அப்பகுதியில் வந்த இருசக்கர வாகனங்களின் உதவியுடன் காட்டுப்புத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்று வந்தார். மேற்கண்ட தகவல்கள் போலீஸ் விசாரணையில் தெரியவந்தது.

கொலையாளிகளை பிடிக்க தொட்டியம் இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன் மற்றும் காட்டுப்புத்தூர் சப்இன்ஸ்பெக்டர் சங்கர் மற்றும் போலீசார் கொண்ட தனிப்படை அமைக்கப்பட்டது. தனிப்படையினர் விசாரணை நடத்தி தேனி மாவட்டம் பெரியகுளம் தாலுக்கா மேற்குவார் பட்டி ராமர் கோவில் தெருவை சேர்ந்த தாசில்ராஜா மகன் சதீஷ்குமார் (21), மலைச்சாமி மகன்புவனேஸ்வரன் (24) ஆகிய 2 பேரைகைது செய்தனர். இதில் தொடர்பு உடைய மேலும் 6 பேரை பிடிக்கதனிப்படை போலீசார் விரைந்துள்ளனர்.

# திருச்சி விமான நிலையத்தில் கியாஸ் ரெகுலேட்டரில் மறைத்து எடுத்து வந்த ரூ. 27.19 லட்சம் மதிப்பிலான தங்கம் பறிமுதல்




கே.கே. நகர், நவ.12

திருச்சி விமான நிலையத்திற்கு பல்வேறு வெளிநாடுகளில் இருந்து இயக்கப்படும் விமானங்களில் அதிக அளவில் தங்கம் கடத்தப்பட்டு வருவதும் அதனை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்வதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கடந்த சில நாட்களில் அதிக அளவிலான கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அதிலும் குறிப்பாக துபாய், மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளில் இருந்து அதிக அளவிலான தங்கம் கடத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில் நேற்று மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இருந்து ஏர் ஏசியா விமானம் திருச்சி வந்தது.

இந்த விமானத்தில் பயணம் செய்த பயணிகளின் உடமைகளைசுங்கத்துறை அதிகாரிகள் சோதனை செய்தனர். அப்போது சந்தேகத்திற்கு இடமான வகையில் வந்த பயணி ஒருவரை சோதனை செய்ததில் அவரிடமிருந்து 2 தங்க காசுகளும் 2 தங்க மோதிரமும் பறிமுதல் செய்யப்பட்டது. தொடர்ந்து அவரிடம் நடத்தப்பட்ட சோதனையில் அவர் கியாஸ் ரெகுலேட்டரில் மறைத்து எடுத்து வந்த ரூ.27.19 லட்சம் மதிப்பிலான கடத்தல் தங்கத்தை பறிமுதல் செய்தனர். அவரிடம் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

# போதைபொருள் வழக்கு சின்னத்திரை நடிகைக்கு நீதிமன்ற காவல் அதிர்ச்சியில் திரையுலகினர்



சென்னை, நவ.12

சென்னை ராயப்பேட்டையில் உள்ள பிரபல வணிக வளாகத்தின் 7வது நுழைவுவாயில் 5 கிராம் 'மெத்தம்பெட்டமைன்' போதைப் பவுடருடன் நின்றுக்கொண்டிருந்த இளம்பெண்ணை போலீசார் கைது செய்தனர்.

போதை பொருளை பறிமுதல் செய்த போலீசார் அந்த இளம்பெண்ணிடம் விசாரணை நடத்தினார்கள். விசாரணையில் அவர், சின்னத்திரை துணை நடிகை எஸ்தர் என்கிற மீனா (வயது 28) என்பது தெரிய வந்தது.

தனி 'நெட்வொர்க்' அமைத்து 'மெத்தம்பெட்டமைன்' போதைப் பவுடர் விற்பனை நடைபெற்று இருக்கிறது. 'வாட்ஸ் அப்' மூலம் குழு அமைத்து சினிமா கலைஞர்களுக்கு சப்ளை செய்யப்பட்டு வந்துள்ளதாகவும் பரபரப்பு தகவல்கள் வெளியாகி உள்ளது.

இதனையடுத்து அவரை போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினர்.

துணை நடிகை மீனாவுக்கு 15ம் தேதி வரை நீதிமன்ற காவல் வைக்கும்படி சென்னை எழும்பூர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேலும் இதன் பின்னணியில் உள்ள குற்றவாளிகளையும் விரைவில் கைது செய்ய வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# சிறிய கோவில்களுக்கும் கும்பாபிஷேகம் நடத்துவதை சாதனையாக பார்க்கிறேன்: தருமபுரம் ஆதீனம் பேட்டி



தஞ்சாவூர், நவ.12

தஞ்சை பெரிய கோவிலில் இன்று மாமன்னர் ராஜராஜசோழன் 1039வது சதயவிழா நடந்து வருகிறது. விழாவில் கோவில் பணியாளர்களுக்கு புத்தாடைகளை திருக்கயிலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம் 27வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்கினார்.

பின்னர், அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:

மாமன்னர் ராஜராஜ சோழனின் 1039வது சதய விழா சிறப்பாக அரசு சார்பில் கொண்டாடப்பட்டு வருகிறது. பெரியகோவில் மிக புண்ணியம் பெற்றது. திருவிசைப்பாபாடல் பெற்ற தலம். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் ஏற்ப நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெரிய கோவிலின் கட்டுமானம் குறித்து உலக அளவிலான ஆய்வாளர்கள் கூட கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு சாதனையாக ராஜராஜசோழன் செய்துள்ளார். விட்டுக் கொடுத்தால் கெட்டுப் போவதில்லை என்பதற்கு உதாரணமாக ராஜராஜ சோழன் விளங்கினார். உலகம் முழுவதும் சென்று தனது வீரத்தை பறைசாற்றி நமக்கு திருமுறையை மீட்டுக் கொடுத்தவர். திருச்சி உய்யக்கொண்டான் மலையில் நாளை மறுநாள் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. அதற்கு அனைத்து ஆதீனங்களும் வருகிறார்கள்.

அப்போது சூரியனார் கோவில் ஆதீனம் திருமணம் தொடர்பாக பேசி முடிவெடுக்க உள்ளோம். தற்போது உள்ள அரசு ஆன்மீக அரசு.

எல்லா முகூர்த்த நாட்களிலும் கும்பாபிஷேகங்களை நடத்திக் கொண்டிருக்கின்றனர். திருப்பணிகளை விரைந்து செய்து, அதிகளவில் கும்பாபிஷேகம் செய்வதை சாதனையாக கருதுகிறேன்.

தமிழகத்தில் பெரிய கோவில்கள் மட்டுமின்றி, சிறிய கோவில்களுக்கும் கும்பாபிஷேகத்தை இந்த அரசு நடத்துவதை சாதனையாக பார்க்கிறேன். பெரிய கோவில்களை காட்டிலும், கிராம கோவில்களின் உண்டியல் வருமானம் அதிகளவில் உள்ளது. கிராம கோவில்களை யாரும் பராமரிக்காமல் சென்றுவிடக்கூடாது என்பதற்காக, அந்த கோவில்களுக்கு அரசு தனிக்கவனம் செலுத்துகிறது.

இந்த அரசு கோவில் சொத்துகளை மீட்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. குறிப்பாக திருச்செந்தூரில் ஆதீனத்திற்கு சொந்தமான ரூ.400 கோடி மதிப்பிலான நிலங்கள், திருச்சியில் ரூ.500 கோடி மதிப்பிலான நிலங்களை மீட்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தூத்துக்குடி கடற்கரையில் அழுகிய நிலையில் ஒதுங்கிய 100 கிலோ எடை கொண்ட அரிய வகை கடல் ஆமை



தூத்துக்குடி, நவ.12

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள மன்னார் வளைகுடா கடல் பகுதியில் அரிய வகை ஆமை இனங்கள் உயிர் வாழ்கின்றன. அவை கடற்கரை பகுதிகளில் குஞ்சு பொரித்து வாழ்ந்து வருகின்றன.

ஆமையை மீனவர்கள் உணவுக்காக பிடிக்கவோ, வேட்டையாடவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் அழிந்து வரும் ஆமை இனங்களை பாதுகாக்க வனத்துறை சார்பில் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் இன்று காலை தூத்துக்குடி முத்துநகர் கடற்கரை பகுதியில் அரிய வகை ஆமை இறந்து அழுகிய நிலையில் கரை ஒதுங்கியது.

கரை ஒதுங்கிய ஆமை சுமார் 3 அடி நீளமும், 100 கிலோ எடையும் கொண்டதாக இருந்தது. அதன் முகத்தில் கண்கள் இல்லாமல், வாய் மற்றும் இறக்கை பகுதிகள் சேதம் அடைந்து அழுகிய நிலையில் காணப்பட்டது. கடற்கரையில் இறந்து ஒதுங்கி கிடந்த ஆமையை கடற்கரைக்கு நடைபயிற்சிக்கு வந்த பொதுமக்கள் இளைஞர்கள் பார்த்தனர்.

இதுதொடர்பாக வனத்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட தன் அடிப்படையில் வனத்துறை அதிகாரிகள் விரைந்து சென்று ஆமை எவ்வாறு இறந்தது? யாரேனும் ஆமையை வேட்டையாடி கொன்றார்களா? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் ஆமையை அந்த பகுதியிலேயே உடற்கூறாய்வு செய்து புதைக்கவும் ஏற்பாடு செய்தனர்.

# விபத்தில் மூளைச்சாவு அடைந்த நிதி நிறுவன உரிமையாளர் உடல் உறுப்புகள் தானம்

வெள்ளகோவில், நவ.12

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் அருகே உள்ள மூத்தாம் பாளையத்தை சேர்ந்தவர் குமாரவடிவேல் (வயது 56).

இவர் கேரள மாநிலம் தலைச்சேரியில் நிதி நிறுவனம் நடத்தி வந்தார்.

சில தினங்களுக்கு முன்பு தலைச்சேரி பகுதியில் பணம் வசூல் செய்ய சென்ற போது, வாகன விபத்தில் சிக்கி மூளைச்சாவு அடைந்தார்.

இந்தநிலையில் அவரது குடும்பத்தினர் குமார வடிவேல் உடல் உறுப்புகளை தானம் செய்ய முடிவு செய்தனர்.

இதையடுத்து ஆம்புலன்ஸ் மூலம் குமாரவடிவேல் உடல் கோவையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு எடுத்து வரப்பட்டது. அங்கு கண், கல்லீரல் உள்ளிட்ட உடல் உறுப்புகள் ஆபரேசன் மூலம் எடுக்கப்பட்டு, உறுப்புகள் தேவைப்படும் நோயாளிகளுக்கு பொருத்தப்பட்டது.

இன்று காலை குமார வடிவேலின் உடல் அரசு மரியாதையுடன் சொந்த ஊரான மூத்தாம்பாளையம் கிராமத்தில் தகனம் செய்யப்பட்டது.

தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர்பெலிக்ஸ் ராஜா, காங்கயம் தாசில்தார் மோகனன் மற்றும் நில வருவாய் அலுவலர் சுந்தரி, கிராம நிர்வாக அலுவலர்கள் மோகன் பிரபு, கவுசல்யா ஆகியோர் அரசின் சார்பில் அஞ்சலி செலுத்தினர்.

குமாரவடிவேலுக்கு சித்ரா என்ற மனைவியும் 2 மகள்களும் உள்ளனர். உடல்உறுப்புகளைதானம் செய்ய முன்வந்த குமாரவடிவேலின் குடும்பத்தினரை பொது மக்கள், டாக்டர்கள் பாராட்டினர்.

# காட்டுப்பள்ளியில் சாலையில் ராட்சத பள்ளங்களால் 50 லாரிகள் பழுதானது



பொன்னேரி, நவ.12

மீஞ்சூரைஅடுத்த காட்டுப்பள்ளியில் நிலக்கரி கிடங்கு சாலை வட சென்னை அனல் மின்நிலைய குடியிருப்பு முதல் நிலக்கரி சேமிப்பு கிடங்கு வரை 4 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. இதனை காமராஜர்துறைமுகம் பராமரித்து வருகிறது.

இந்த சாலையை பயன்படுத்தி தினமும் 1000க்கும் மேற்பட்ட லாரிகள் சேமிப்பு கிடங்கில் இருந்து நிலக்கரிகளை ஏற்றிக்கொண்டு ஆந்திரா, கர்நாடகா, கேரளா மற்றும் தமிழகத்தின் பிற பகுதிகளுக்கு சென்று வருகின்றன. மேலும் சாம்பல் கழிவுகளை ஏற்றி செல்லும் லாரிகளும் இந்த சாலையை பயன்படுத்தி வருகின்றன.

இந்நிலையில் கடந்த சில நாட்களாக பெய்த மழையினால் 4 கிலோ மீட்டர் தூரம் சாலை மிகவும் பழுதடைந்து பல இடங்களில் ராட்சத பள்ளங்கள் ஏற்பட்டு உள்ளன. இதனால் லாரிகள் செல்ல முடியாத அளவுக்கு சாலை காணப்படுகிறது.

சேதம் அடைந்த சாலையில் லாரிகள் செல்லும் போது அதன் டயர்கள் அடிக்கடி கிழிந்து விடுவதால் லாரி டிரைவர்கள் மிகவும் சிரமம் அடைந்து வருகிறார்கள்.

இதுகுறித்து லாரி டிரைவர்கள்கூறும்போது, நிலக்கரி கிடங்கு சாலை போக்குவரத்திற்கு லாயக்கற்ற நிலையில் உள்ளது. ஒவ்வொரு லாரியாக சென்று வருவதால் குறித்த நேரத்தில் நிலக்கரியை ஏற்றி செல்ல முடிவதில்லை. நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி உள்ளது. கடந்த சில நாட்களில் சேதம் அடைந்த சாலையில் உள்ள ராட்சத பள்ளங்களால் இதுவரை 50க்கும் மேற்பட்ட லாரிகள் பழுதாகி உள்ளன. எண்ணூர் காமராஜர் துறைமுக நிர்வாகம் சாலையை சீரமைத்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

# கல்லூரி மாணவர்கள் தங்கியிருக்கும் வீடுகளில் 450 போலீசார் அதிரடி சோதனை



கோவை, நவ.12

கோவை மாவட்டத்தில் அரசு மற்றும் தனியார் கல்லூரி நிறுவனங்கள் ஏராளமாக உள்ளன. இங்கு உள்ளூரைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமல்லாமல் வெளி மாவட்டங்கள், வெளி மாநிலங்களைச் சேர்ந்த ஏராளமான மாணவர்கள் படித்து வருகிறார்கள்.

வெளியூர் மாணவர்கள் பெரும்பாலானோர் கல்லூரிகளில் உள்ள விடுதிகளில் தங்கியிருந்து படிக்கிறார்கள். மேலும் பலர் தனியாக வீடு எடுத்து தங்கியுள்ளனர். தனியார் விடுதிகளிலும் ஏராளமானோர் தங்கி இருக்கிறார்கள்.

இவ்வாறு தங்கியிருக்கும் மாணவர்கள் மத்தியில் தற்போது போதைப்பழக்கம் அதிகரித்துள்ளது. போதைக்கு அடிமையாகும் மாணவர்கள் அடிக்கடி மோதலில் ஈடுபடும் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. இதன் காரணமாக கோவை போலீசார் மாணவர்கள் தங்கியிருக்கும் வீடுகள், தங்கும் விடுதிகளில் அவ்வப்போது சோதனை நடத்தி வருகிறார்கள். சூலூர் பகுதியில் கடந்த வாரம் நடத்திய சோதனையின்போது போதைப்பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

போதைப் பொருளை வெளிமாநிலங்களில் இருந்து கொண்டு வந்து ஒரு கும்பல் மாணவர்கள் மத்தியில் சப்ளை செய்து வரும் தகவல் போலீசாருக்கு கிடைத்தது.

அதன்பேரில் போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர். நேற்று முன்தினம் நடந்த சோதனையில் ராஜஸ்தான் மாநிலத்தில் இருந்து வலி நிவாரணி மாத்திரைகளை ரெயிலில் கோவைக்கு கொண்டு வந்து கல்லூரி மாணவர்களுக்கு விற்பனை செய்ய முயன்ற 7 பேரை போலீசார் கைது செய்தனர்.

இந்தநிலையில் செட்டிப்பாளையம் பகுதியில் தங்கியிருக்கும் மாணவர்களுடன், மாணவர்கள் அல்லாத சிலரும் தங்கியிருப்பதாகவும், அவர்கள் மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்து அவர்களை தவறான பாதைக்கு அழைத்துச் செல்வதாகவும் போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

அதன்பேரில் இன்று மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு கார்த்திகேயன் உத்தரவின் பேரில் ஏ.டி.எஸ்.பி, 4 டி.எஸ்.பி, 6 இன்ஸ்பெக்டர்கள் தலைமையில் 450 தனிப்படை போலீசார் செட்டிபாளையம், மதுக்கரை, கே.கே. சாவடி பகுதிகளில் மாணவர்கள் தனியாக தங்கியுள்ள வீடுகள், அறைகள் மற்றும் விடுதிகள் ஆகிய இடங்களில் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.

அறைகளில் கஞ்சா, போதை மாத்திரை பதுக்கி வைக்கப்பட்டுள்ளதா? என்றும், அவர்கள் கல்லூரி மாணவர்கள் தானா? அவர்களது பெற்றோர் என்ன வேலை செய்கிறார்கள்? அவர்கள் வைத்துள்ள வாகனங்கள் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளதா? என்பது உள்ளிட்ட பல்வேறு கேள்விகளை எழுப்பி விசாரணை நடத்தினர். அவர்கள் வைத்திருந்த பெட்டிகள், பைகளில் போலீசார் சோதனை செய்தனர்.

தொடர்ந்து போலீசார் சோதனையில் ஈடுபட்டு வருவதால் போதைப்பொருள் எதுவும் சிக்கியதா என்ற விவரம் இன்று மாலை தெரியவரும்.

இதில் மாணவர்கள் சிலர் நேரடியாக போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட அதிர்ச்சி தகவலும் கிடைத்துள்ளது. உல்லாச வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு அவர்கள் இவ்வாறு போதைப்பொருள்கள் விற்பனை செய்துள்ளனர். அதில் கிடைக்கும் பணத்தை கொண்டு பெங்களூரு உள்ளிட்ட இடங்களுக்கு சென்று ஜாலியாக இருந்துள்ளனர். இவர்களின் பெற்றோர் சமூகத்தில் வசதி படைத்தவர்களாகவே உள்ளனர். பெற்றோர் கொடுக்கும் பணத்தை செலவு செய்து, போதைப்பொருளும் விற்று உல்லாசமாக இருந்துள்ளனர்.

இந்த மாணவர்களை கண்டுபிடித்து இந்த நெட்வொர்க்கை உடைக்கவும் அவர்களை போதைப்பொருள் பிடியிலிருந்து மீட்கவும் போலீசார் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

# உடுமலை வனப்பகுதியில் இறந்து கிடந்த குட்டி யானை



உடுமலை, நவ.12

திருப்பூர் மாவட்டம் ஆனைமலை புலிகள் காப்பக பகுதியில் உடுமலை மற்றும் அமராவதி வனச்சரகங்கள் உள்ளன. இங்கு யானை, புலி, சிறுத்தை, காட்டெருமை, கடமான் உள்ளிட்ட ஏராளமான வனவிலங்குகள் வசித்து வருகிறது.

இந்தநிலையில் உடுமலை வனச்சரகத்திற்கு உட்பட்ட மானுப்பட்டி பிரிவு, ஈசல் தட்டு கிழக்கு சுற்று, செட்டி மொடக்கு சரக பகுதியில் வனத்துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டு வந்தனர். அப்போது அங்கு 5 வயது மதிக்கத்தக்க ஆண்யானை குட்டி ஒன்று இறந்த நிலையில் கிடந்தது.

இது குறித்த தகவல் அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் யானைகுட்டியின்உடலை பிரேத பரிசோதனை செய்யுமாறு மாவட்ட வன அலுவலர் தேவேந்திர குமார் மீனா உத்தரவிட்டார். அதைத்தொடர்ந்து உதவி வனப்பாதுகாவலர் (பயிற்சி) கீதா முன்னிலையில் பிரேத பரிசோதனை நடைபெற்றது.

கால்நடை டாக்டர் விஜயராகவன் தலைமையிலான குழுவினர் பிரேத பரிசோதனை செய்தனர். யானை குட்டி மார்பக பகுதியில் ஏற்பட்ட உள்காயத்தின் காரணமாக இறந்தது தெரிய வந்துள்ளது. இது குறித்து வனத்துறையினர் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# விவேகானந்தர் பாறைதிருவள்ளுவர் சிலை இடையே கண்ணாடி கூண்டு பாலம் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்?



கன்னியாகுமரி, நவ.12

கன்னியாகுமரி கடல் நடுவில் அமைந்துள்ள சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபம், 133 அடிஉயர திருவள்ளுவர் சிலையை இணைக்கும் வகையில் இரண்டுக்கும் இடையே நெடுஞ்சாலை துறை மூலம் ரூ.37 கோடி செலவில் கண்ணாடி இழையிலான கூண்டு பாலம் அமைக்கும் பணி நடந்து வருகிறது.

77 மீட்டர் நீளத்திலும் 10 மீட்டர் அகலத்திலும் பாலம் அமைக்கப்பட உள்ளது. அதிகபட்சம் கடல் அலைக்கு மேல் 7 மீட்டர் உயரத்தில் இந்த பாலம் அமைக்கப்படுகிறது.

இந்த பாலத்தின் ஆர்ச் உயரம் 11 மீட்டர் ஆகும். முற்றிலும் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கம்பிகளால் வடிவமைக்கப்பட்ட கூண்டின் மீது 2.40 மீட்டர் அகலத்தில் கண்ணாடி பகுதி அமைகிறது. இரு பக்கங்களிலும் கல் மண்டபம் அமைக்கப்படுகிறது.

இந்த பாலத்தில் 101 கூண்டுகள் பொருத்தப்பட உள்ளன. இவை புதுச்சேரியில் இருந்து கண்டெய்னர் லாரிகள் மூலம் கன்னியாகுமரிக்கு கொண்டு வரப்பட்டது. தொடர்ந்து முதல் கட்டமாக 30 கூண்டுகள் படகு மூலம் திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள பாறையில் கொண்டு சென்று இறக்கி வைக்கப்பட்டுள்ளது.

கண்ணாடி கூண்டு பாலம் அமைப்பதற்காக திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள பாறையிலும் விவேகானந்தர் பாறையிலும் ராட்சத கான்கிரீட் தூண்கள் அமைக்கப்பட்டு இரு பக்கத்தையும் இணைக்கும் வகையில் ஆர்ச் போன்ற கூண்டு அமைப்பை பொருத்துவதற்காக இரும்பு தூண்கள்மூலம்சாரமும்அமைக்கப்பட்டுள்ளது.


திருவள்ளுவர் பாறை மற்றும் விவேகானந்தர் பாறையில் அமைக்கப்பட்டு உள்ள 2 ராட்சத தூண்களுக்கு இடையே இரும்பு கம்பிகளால் வடம் போன்று தயாரிக்கப்பட்ட ரோப்புகள் அமைக்கப்பட்டு அந்த ரோப்புகள் வழியாக தொழில் நுட்ப வல்லுநர்கள் விஞ்சு மூலம் சென்று இந்த கூண்டு ஆர்சுகளை பொருத்தி வருகின்றனர்.

இந்த இரு பாறைகளிலும் தலா 4 ஆர்ச்சுகள் பொருத்தப்பட்டு உள்ளன. தொடர்ந்து பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இந்த பணிகளை அடுத்த மாதம் (டிசம்பர்) 15ந் தேதிக்குள் முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திருவள்ளுவர் சிலை கடந்த 2000ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ந்தேதி அப்போதையமுதல்அமைச்சர் கருணாநிதி திறந்து வைத்தார். இந்த சிலை நிறுவி 25 ஆண்டுகள் நிறைவு பெறும் வெள்ளி விழா அடுத்த மாதம் வர உள்ளது.

இதனை முன்னிட்டு வருகிற ஜனவரி 1ந் தேதி புத்தாண்டு பிறக்கும் போது வெள்ளி விழா கொண்டாட்டம் நடைபெற உள்ளதாக கூறப்படுகிறது. இந்த விழாவில் முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் கலந்து கொண்டு கண்ணாடி இழை கூண்டு பாலத்தை திறந்து வைப்பார் என கூறப்படுகிறது.

# தவறான சிகிச்சையால் தொழிலாளியின் மண்ணீரலை அகற்றிய டாக்டர்கள் உறவினர்கள் போராட்டம்



ஸ்ரீபெரும்புதூர், நவ.12

திருவள்ளூரை அடுத்த புல்லரம்பாக்கம் பகுதியை சேர்ந்தவர் நாகராஜ்(48), கூலித்தொழிலாளி. கடந்த சில மாதங்களாக நாகராஜிக்கு வயிற்று வலி அதிகமாக இருந்தது.

இதையடுத்து அவர் ஸ்ரீபெரும்புதூர் அடுத்த தண்டலத்தில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றார். அப்போது இரைப்பையில் கட்டி இருப்பதாகவும் அதனை அறுவை சிகிச்சை செய்து அகற்ற வேண்டும் எனவும் டாக்டர்கள் தெரிவித்தனர்.

இதையடுத்து நாகராஜ், கடந்த 7ந் தேதி அறுவை சிகிச்சை செய்வதற்காக தனியார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அறுவை சிகிச்சையின் போது, டாக்டர்களின் கவன குறைவாலும், தவறான சிகிச்சையாலும் அருகில் இருந்த மண்ணீரலை சேதப்படுத்தியதாக கூறப்படுகிறது. இதனால் நாகராஜிக்கு அறுவை சிகிச்சைக்கு பின்னரும் அதிகமான ரத்த போக்கு இருந்ததாக தெரிகிறது.

இதனால் உடல்நிலை மோசம் அடைந்ததால் டாக்டர்கள்தாங்களாகவே நாகராஜிக்கு மீண்டும் அறுவை சிகிச்சை செய்து மண்ணீரலை அகற்றி உள்ளனர். இதுபற்றி டாக்டர்கள் ஆஸ்பத்திரியில் இருந்த நாகராஜனின் மனைவி மற்றும் குடும்பத்தினர் யாரிடமும் எந்தத் தகவலையும் தெரிவிக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

இதற்கிடையே ஆபரேசன் முடிந்தும் நாகராஜின் உடல் நிலை மோசம் அடைந்ததால் சந்தேகம் அடைந்த உறவினர்கள் டாக்டர்களிடம் விசாரித்தபோதுதான் இறப்பை கட்டி ஆபரேசனின் போது தவறான சிகிச்சையால் மண்ணீரல் அகற்றப்பட்டு இருப்பது தெரிந்தது.

இதனைகேட்டுஅதிர்ச்சி அடைந்த நாகராஜனின் உறவினர்கள் டாக்டர்கள் மற்றும் அங்கிருந்த ஆஸ்பத்திரி ஊழியர்களிடம் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். ஆனால் அவர்கள் உரிய பதில் கூறவில்லை என்று தெரிகிறது. இதையடுத்து நாகராஜின் உறவினர்கள் ஆஸ்பத்திரி உள்ளேயே தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களிடம் ஆஸ்பத்திரி டாக்டர்கள் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள்.

இதுகுறித்து நாகராஜின் உறவினரான திருவள்ளூரை சேர்ந்த மாறன் என்பவர் கூறும்போது, நாகராஜ் கூலி வேலை செய்து வந்தார். அவருக்கு வயிற்று வலி ஏற்பட்டதால் சிகிச்சைக்கு இங்கு வந்தபோது இரைப்பையில் கட்டி உள்ளது என்று கூறி அறுவை சிகிச்சை செய்தனர். அப்போது தவறான சிகிச்சை செய்து மண்ணீரலை அகற்றி உள்ளனர். இது குறித்து உறவினர் யாரிடமும் டாக்டர்கள் தெரிவிக்கவில்லை. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# பீரோ பட்டறை உரிமையாளர் கொலையில் 10 பேர் சரண்



சேலம், நவ.12

சேலம் மாவட்டம் குப்பனூர் வெள்ளியம்பட்டியைசேர்ந்தவர்பட்டறை சரவணன் (45) இவர் நேற்று முன்தினம் வெள்ளாளகுண்டம் பகுதியில் உள்ள தனது பீரோ பட்டறைக்கு காரில் சென்றார். அப்போது அயோத்தியா பட்டணம் அடுத்த அரூர் மெயின்ரோடு பனங்காடு பகுதியில் சென்றபோது மற்றொரு கார் மற்றும் இரு சக்கர வாகனத்தில் வந்த கும்பல் சரவணன் ஓட்டி வந்த கார்மீது மோதி நின்றது.

பின்னர் அந்த கும்பல் காரில்இருந்துசரவணனை வெளியே இறக்கி கொடூரமாக வெட்டி கொலை செய்துவிட்டு தப்பி ஓடி விட்டனர். இது பற்றி தெரியவந்ததும் காரிப்பட்டி போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று கொலை செய்யப்பட்ட சரவணன் உடலை மீட்டு விசாரணை நடத்தினர்.

அப்போது கடந்த ஆண்டு கொலை செய்யப்பட்ட காட்டூர் ஆனந்தன் கொலையாளிகளுக்கு பட்டறை சரவணன் பண உதவி செய்ததும், இதனால் பழிக்கு பழியாக காட்டூர் ஆனந்தனின் மைத்துனர் கார்த்திக் தலைமையிலான கும்பல் சரவணனை கொலை செய்ததும் தெரியவந்தது.

மேலும் கொலை நடந்த இடத்தில் இருந்த கண்காணிப்பு கேமராவை கைப்பற்றி ஆய்வு செய்தனர். அதில் 7 பேர் கும்பல் சரவணனை வெட்டி கொலை செய்தது பதிவாகி இருந்தது.

இதையடுத்து போலீசார் அவர்களை தேடி வந்தனர்.

இந்த நிலையில் பட்டறை சரவணன் கொலை வழக்கு தொடர்பாக காட்டூர் ஆனந்தனின் மனைவி சத்யா (38), அவரது மற்றொரு தம்பி கணேஷ்(30), பொன்னமாபேட்டையை சேர்ந்த ஜீவன்ராஜ் (24), கருப்பூரை சேர்ந்த சாரதி (21), சூர்யா (25),

காமலாபுரத்தை சேர்ந்த பன்னீர்செல்வம் (28), மற்றும்ஆனந்தராஜ்ஆகிய 7 பேரை பிடித்து போலீசார் விசாரணை நடத்தினர். இவர்கள் பட்டறை சரவணனை தீர்த்து கட்டுவதற்கு ஒன்று சேர்ந்து திட்டமிட்டது தெரியவந்தது.

இதையடுத்து 7 பேரையும் போலீசார் கைது செய்தனர். பின்னர் கோர்ட்டில் ஆஜர்படுத்தி அவர்களை சேலம் மத்திய சிறையில் அடைத்தனர்.

இதற்கிடையே இந்த கொலை வழக்கு தொடர்பாக ஆனந்தனின் மைத்துனர் கார்த்திக் உள்பட மேலும் சிலரை போலீசார் தேடி வந்தனர். இதில் மேலும் 10 பேர் காரிப்பட்டி போலீஸ் நிலையத்தில் சரணடைந்தனர்.

முன்னதாக கைதான 7 பேரையும் போலீசார் மருத்துவ பரிசோதனைக்காக வாழப்பாடி அரசு ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்றனர். அப்போது போலீசாருக்கும் அங்கு பணியில் இருந்த டாக்டர்கள், ஊழியர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதால் பரபரப்பு நிலவியது.

# வரத்து குறைவால் பூண்டு கிலோ ரூ.500க்கு விற்பனை



சென்னை, நவ.12

கோயம்பேடு மார்க்கெட்டுக்கு ராஜஸ்தான், மத்திய பிரதேசம் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களில் இருந்து அதிகளவில் பூண்டு விற்பனைக்கு வருகிறது. தினசரி 150 டன் அளவிலான பூண்டு விற்பனைக்கு வருவது வழக்கம்.

ஆனால் தற்போது மத்திய பிரதேச மாநிலத்தில் இருந்து 25 டன் பூண்டு மட்டுமே விற்பனைக்கு வருகிறது. இதனால் தட்டுப்பாடு ஏற்பட்டு கடந்த சில நாட்களாகவே பூண்டு விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

கடந்த 10 நாட்களுக்கு முன்பு மொத்த விற்பனையில் ஒரு கிலோ ரூ.300க்கு விற்ற முதல் ரக பூண்டு தற்போது ரூ.350ஆக அதிகரித்துள்ளது.

கோயம்பேடு மார்க்கெட்டில் மொத்த விற்பனை கடைகளில் ரகத்தை பொறுத்து ஒரு கிலோ பூண்டு ரூ.220 முதல்ரூ.350வரையிலும், சில்லரை விற்பனையில் ஒரு கிலோ பூண்டு ரூ.300 முதல் ரூ.400 வரையிலும் விற்கப்படுகிறது.

இதனால் வெளி மார்க்கெட்டில் உள்ள கடைகளில் ஒரு கிலோ பூண்டு ரூ.450 முதல் ரூ.500 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

சமையலுக்கு தினசரி பயன்படுத்தப்படும் வெங்காயம் விலை ஏற்கனவே ஒரு கிலோ ரூ.100யை எட்டி உள்ள நிலையில் தற்போது பூண்டு விலையும் அதிகரித்து வருவது இல்லத்தரசிகளை பெரிதும் கவலை அடைய செய்துள்ளது.

இதுகுறித்து பூண்டு மொத்த வியாபாரி ஒருவர் கூறும்போது, "கோயம்பேடு சந்தைக்கு மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களில் இருந்து தான் அதிக அளவில் பூண்டு விற்பனைக்கு வரும்.

இந்த மாநிலங்களில் தற்போது பூண்டு சீசன் முடியும் தருவாயில் உள்ளது. இதனால் வரத்து குறைந்து விலை அதிகரித்து வருகிறது.

இனி வரும் நாட்களில் பூண்டின் விலை மேலும் அதிகரிக்கவே வாய்ப்புள்ளது. ஜனவரி மாத இறுதியில் மீண்டும் வரத்து அதிகரித்து பூண்டு விலை படிப்படியாக குறையும்" என்றார்.

# கும்பகோணம் அருகே விளைந்த `வினோத தேங்காய்'

## ஆச்சரியத்துடன் கண்டு ரசித்த மக்கள்



சுவாமிமலை, நவ.12

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அடுத்துள்ளநரிக்குடிகிராமத்தில் மெயின்ரோட்டில் வசிப்பவர் காசிநாதன் (வயது 60). விவசாயி. இவரது தென்னந்தோப்பில் ஏராளமான தென்னை மரங்கள் உள்ளன.



இந்நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன்பு இவர் தோப்பில்உள்ளதென்னை மரங்களில் விளைந்த தேங்காய்களை (மட்டையுடன்) பறித்து, அதனை வீட்டில் வைத்திருந்தார். பின்னர், நேற்று அவர் பறித்த தேங்காய்களில் இருந்து மட்டை தேங்காய்களை உறிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

அப்போது ஒரே மட்டையில் ஒரு பெரிய தேங்காயுடன் இயற்கையாகவே விளைந்த குட்டி தேங்காயும் நாருடன் சிக்கி இருந்துள்ளது. அந்த குட்டி தேங்காயின் அளவு சுமார் 3 செ.மீவரைஇருந்துள்ளது.

இதனை கண்ட அவர் ஆச்சரியம் அடைந்தார். பின்னர், இதுகுறித்து அவர் குடும்பத்தினருக்கு தெரிவித்த, அவர்களும் இந்த வினோத தேங்காய்யை கண்டு வியப்பில் ஆழ்ந்தனர். பின்னர், இது குறித்து விவசாயி காசிநாதன் கூறுகையில்:இது போன்ற வினோதமான தேங்காய் இதுவரை விளைந்ததில்லை.எனக்கு தெரிந்து இதுவே முதன் முறை. எனவே, இந்த தேங்காயை நாங்களே (குடும்பத்தினர்கள்) பாதுகாத்து வைத்துக்கொள்ளப் போகிறோம் என்றார்.

மேலும், இந்த ருசிகர சம்பவம் குறித்து அறிந்த கிராமத்தினர், குழந்தைகள் உள்பட அனைத்து தரப்பு மக்களும் அந்த குட்டி தேங்காயை கண்டு புன்னகைத்து மகிழ்ந்தனர்.

# கொடைக்கானலில் குவிந்த சுற்றுலாப் பயணிகளால் போக்குவரத்து நெரிசல்



கொடைக்கானல், நவ.12

ஊட்டி, கொடைக்கானலுக்கு விடுமுறை நாட்கள் மற்றும் சீசன் காலங்களில் அளவுக்கு அதிகமான சுற்றுலா வாகனங்கள் வருவதால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

இதை தவிர்க்க கடந்த மே7ந் தேதி முதல் செப்டம்பர் 30ந் தேதி வரை உயர் நீதிமன்ற உத்தரவுபடி இபாஸ் முறை அமல்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்தும் இங்கு வரும் வாகனங்களுக்கு இபாஸ் முறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் ஊட்டி, கொடைக்கானலுக்கு இபாஸ் பெற்ற வாகனங்களை மட்டுமே அனுமதிக்க வேண்டும் என நீலகிரி மற்றும் திண்டுக்கல் மாவட்ட கலெக்டர்களுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன்படி இபாஸ் அனுமதி குறித்து கொடைக்கானல் நகருக்குள் நுழையும் முன்பு பயணிகளிடம் சோதனை மேற்கொள்ளப்பட்டது. கியூ.ஆர். கோடு மூலம் ஸ்கேன் செய்து இபாஸ் பெற்ற வாகனங்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டது.

இபாஸ் பெறாத வாகனங்கள் நுழைவு வாயிலிலேயே தடுத்து நிறுத்தப்பட்டன. வார விடுமுறை காரணமாக காலை முதலே ஏராளமான சுற்றுலாப் பயணிகள் பல்வேறு வாகனங்களில் வந்தனர்.

இபாஸ் மற்றும் வழக்கமான சோதனைக்கு போதிய பணியாளர்கள் இல்லாததால் நீண்ட நேரம் காத்திருக்கும் நிலை ஏற்பட்டது.

மேலும் 5 லிட்டருக்கும் குறைவான தண்ணீர் பாட்டில் மற்றும் குளிர்பான பாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டது. ஒவ்வொரு பாட்டிலுக்கும் தலா ரூ.20 பசுமை வரி வசூலிக்கப்பட்டது.

இதனால் வெள்ளி நீர் வீழ்ச்சி அருகே உள்ள சுங்கச்சாவடியில் இருந்து சுமார் 3 கி.மீ. தூரத்திற்கு வாகனங்கள்நீண்ட வரிசையில் காத்திருந்தன. இதனால் அப்பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இபாஸ் பெறாமல் வந்த வாகனங்களை சுங்கச்சாவடி அருகிலேயே நிறுத்தி சோதனை செய்ததால் மற்ற வாகனங்கள் நீண்ட நேரம் காத்திருக்கும் நிலை ஏற்பட்டது.

இபாஸ் குறித்து தெரியாமல் வந்த சுற்றுலாப் பயணிகள் போலீசாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பரபரப்பான சூழல் ஏற்பட்டது.அவர்களிடம்இபாஸ் பெறுவது குறித்து போலீசார் விழிப்புணர்வு ஏற்படுத்தி சமாதானம் செய்து அனுப்பி வைத்தனர்.

மலைச்சாலையில் இபாஸ் சோதனை செய்வதால் குறுகிய இடத்தில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

எனவே வத்தலக்குண்டு அருகே உள்ள காட்ரோடு மற்றும் காமக்காபட்டி சோதனைச்சாவடியிலும், பழனி அடிவார பகுதியிலும் கொடைக்கானல் வருவதற்கு முன்பே சுற்றுலாப் பயணிகளிடம் இபாஸ் சோதனை மேற்கொண்டால் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கலாம்.

மேலும் நேர விரையமும் தவிர்க்கப்படலாம். எனவே அடிவாரப்பகுதியில் உள்ள சோதனை சாவடிகளிலேயே சோதனை மேற்கொள்ள வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

# 'கங்குவா' திரைப்படம் தீபாவளியில் ஏன் வெளியாகவில்லை தெரியுமா...!




இயக்குனர் சிவா இயக்கத்தில் நடிகர் சூர்யா நடித்துள்ள திரைப்படம் 'கங்குவா'. ஸ்டுடியோ கிரீன் மற்றும் யுவி கிரியேஷன் நிறுவனம் இணைந்து தயாரித்துள்ள இந்த படத்தில் திஷா பதானி, பாபி தியோல், யோகி பாபு, ரெடின் கிங்ஸ்லி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படத்துக்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்துள்ளார்.

வெற்றி ஒளிப்பதிவு செய்யும் இப்படம் 3டி முறையில் சரித்திர படமாக உருவாகியுள்ளது. சமீபத்தில் இப்படத்தின் டிரெய்லர் வெளியாகி வரவேற்பை பெற்றது. இந்த படம் வரும் 14 ந்தேதி திரையரங்குகளில் ரிலீசாக உள்ளது. இப்படத்தின் டிரெய்லர் மற்றும் பாடல்கள் வெளியாக கவனம் பெற்றன.

இதற்கிடையில் கங்குவா திரைப்படத்தை, ரஜினியின் 'வேட்டையன்' படம் வெளியான கடந்த அக்டோபர் மாதம் 10ந் தேதியில் வெளியீடுவதாக படக்குழு திட்டமிட்டிருந்தனர். ஆனால் ஒரு சில காரணத்தால் அந்த தேதியில் வெளியிடவில்லை. பின்னர் தீபாவளி பண்டிகையில் வெளியிட திட்டமிட்டனர்.

ஆனால் தீபாவளி பண்டிகையில் இப்படத்தை வெளியிட்டிருந்தால் சுமார் 4,000 முதல் 5,000 திரைகள் மட்டுமே திரையிடப்பட்டிருக்கும். ஆனால் வருகிற 14 ந் தேதி வெளியிட்டால் சுமார் 11,500க்கும் அதிகமான திரைகளில் இப்படம் திரையிடப்படும் என்று இப்படத்தின் இயக்குனர் ஞானவேல் ராஜா சமீபத்திய நிகழ்ச்சி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

# உலக நாயகன் என்று என்னை அழைக்க வேண்டாம்.. கமல்ஹாசன்



நடிகரும், மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவருமான கமல்ஹாசன் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

என் மீது கொண்ட அன்பினால் 'உலக நாயகன்' உட்பட பல பிரியம் ததும்பும் பட்டங்களால் என்னை அழைக்கிறீர்கள். மக்கள் கொடுத்து, சக கலைஞர்களாலும் ரசிகர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இப்படிப்பட்ட பாராட்டுச் சொற்களால் மகிழ்ந்திருக்கிறேன். உங்கள் இந்த அன்பால் நெகிழ்ந்துமிருக்கிறேன். உங்களின் பிரியத்தின் மீது எனக்கு மாறாத நன்றியுணர்வும் உண்டு.

சினிமாக் கலை, எந்த ஒரு தனி மனிதனையும் விட பெரியது. அந்தக் கலையில் மேலும் மேலும் கற்றுக்கொண்டு பரிணாமம் அடைய விரும்பும் ஒரு மாணவன் தான் நான். பிற கலைகளைப் போலவே சினிமாவும் அனைவருக்குமானது. அனைவராலுமானது.திறமையானகலைஞர்கள்,தொழில்நுட்ப வல்லுனர்கள், நல்ல ரசிகர்கள் ஒன்றிணைந்துதான் சினிமா உருவாகிறது.

கலையை விடக் கலைஞன் பெரியவன் இல்லை என்பது என் ஆழமான நம்பிக்கை. கற்றது கைம்மண் அளவு என்பதை உணர்ந்தவனாகவும், தொடர்ச்சியான முன்னகர்வில் நம்பிக்கை கொண்டு உழைத்துயர்பவனாகவும் இருப்பதே எனக்கு உவப்பானது. அதனால்தான் நிறைய யோசனைக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வர நேர்ந்தது. மேலே குறிப்பிட்டது போன்ற பட்டங்களையும் அடைமொழிகளையும் வழங்கியவர்களுக்கு எந்த மரியாதைக் குறைவும் வந்து விடாத வண்ணம் அவற்றைத் துறப்பது என்பதே அது.

எனவே, என் மீது பிரியம் கொண்ட அனைவருக்குமாக ஒரு வேண்டுகோள் வைக்கிறேன். இனிவரும் காலத்தில் என் ரசிகர்களும் ஊடக நண்பர்களும் திரைத்துறையைச் சார்ந்தவர்களும், மக்கள் நீதி மய்யம் கட்சித் தொண்டர்களும், சக இந்தியர்களும் என்னை கமல்ஹாசன் என்றோ கமல் என்றோ KH என்றோ குறிப்பிட்டால் போதுமானது என்று கேட்டுக்கொள்கிறேன்.

இத்தனை காலமாக நீங்கள் என் மேல் காட்டி வரும் அன்புக்கு மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவிக்கிறேன். மனிதன் என்கிற ஸ்தானத்திலிருந்தும், சினிமாவை நேசிக்கிற நம் அனைவரிலும் ஒருவனாகவே நான் இருக்க வேண்டும் என்கிற என் எண்ணத்தில் இருந்தும் இந்த வேண்டுகோள் வெளிப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெர்குசன் ஹாட்ரிக்... கடைசி பந்தில் இலங்கையை வீழ்த்தி திரில் வெற்றி பெற்ற நியூசிலாந்து



இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட நியூசிலாந்து கிரிக்கெட் அணி 2 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடியது. இதில் நடைபெற்ற முதல் போட்டியில் இலங்கை வெற்றி பெற்றிருந்தது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையிலான 2வது மற்றும் கடைசி போட்டி நேற்று நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற இலங்கை பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த நியூசிலாந்து, இலங்கை அணியின் அபார பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 19.3 ஓவர்களில் 108 ரன்களில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக வில் யங் 30 ரன்கள் அடித்தார். இலங்கை தரப்பில் அதிகபட்சமாக வனிந்து ஹசரங்கா 4 விக்கெட்டுகளும்,பதிரனா3விக்கெட்டுகளும்வீழ்த்தினர்.

இதனையடுத்து 109 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை எளிதில் வெற்றி பெறும் என்று அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால் பெர்குசன் மற்றும் கிளென் பிலிப்ஸ் ஆட்டத்தின் போக்கையே மாற்றி விட்டனர்.

இலங்கை தரப்பில் தொடக்க ஆட்டக்காரர் பதும் நிசங்கா மட்டும் தனி ஆளாக வெற்றிக்கு போராடினார். ஆனால் மறுமுனையில் அவருக்கு ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. நியூசிலாந்து பந்துவீச்சாளர்கள் சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை வீழ்த்தினர். அதிலும் பெர்குசன் ஹாட்ரிக் விக்கெட் வீழ்த்தி அசத்தினார்.

கடைசி ஓவரில் இலங்கை அணியின் வெற்றிக்கு 8 ரன்கள் தேவைப்பட்ட நிலையில் கைவசம் 3 விக்கெட்டுகள் இருந்தன. அந்த ஓவரை கிளென் பிலிப்ஸ் வீசினார். களத்தில் அரைசதம் அடித்த நிசங்கா இருந்தார். இதனல் இலங்கை பக்கமே வெற்றி வாய்ப்பு அதிகமாக இருந்தது.

ஆனால் அந்த ஓவரில் வெறும் 2 ரன்களை மட்டுமே விட்டுக்கொடுத்த அவர் எஞ்சிய 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றி நியூசிலாந்துக்கு திரில் வெற்றியை பெற்றுக்கொடுத்தார். 19.5 ஓவர்களில் ஆல் அவுட் ஆன இலங்கை 103 ரன்கள் மட்டுமே அடித்தது. இதன் மூலம் 5 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற நியூசிலாந்து தொடரை 11 என்ற கணக்கில் சமன் செய்தது.

இலங்கை தரப்பில் அதிகபட்சமாக நிசங்கா 52 ரன்கள் அடித்தார். நியூசிலாந்து தரப்பில் கிளென் பிலிப்ஸ் மற்றும் பெர்குசன் தலா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

ஹாட்ரிக் விக்கெட் வீழ்த்தி அசத்திய பெர்குசன் ஆட்ட நாயகனாகவும், ஹசரங்கா தொடர் நாயகனாகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

# ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் முதல் முறை.. சாதனை படைத்த பாகிஸ்தான் அணி




பாகிஸ்தான் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. இதில் முதல் ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவும், 2வது ஆட்டத்தில் பாகிஸ்தானும் வெற்றி பெற்றிருந்தன. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3வது மற்றும் கடைசி ஒரு நாள் கிரிக்கெட் போட்டி பெர்த்தில் உள்ள ஆப்டஸ் ஸ்டேடியத்தில் நேற்று நடந்தது.

இதில்டாஸ்வென்றபாகிஸ்தான்அணியின்கேப்டன்ரிஸ்வான் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி முதலில் பேட்டிங் செய்தஆஸ்திரேலியஅணிபாகிஸ்தானின்பந்துவீச்சைசமாளிக்க முடியாமல் 31.5 ஓவர்களில் 140 ரன்களில் சுருண்டது. பின்னர் 141 ரன்கள் இலக்கை நோக்கி ஆடிய பாகிஸ்தான் அணி 26.5 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து 143 ரன்கள் சேர்த்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை பாகிஸ்தான் 21 என்ற கணக்கில் கைப்பற்றியது.

முன்னதாக இந்த தொடரில் பாகிஸ்தான் அணி 2வது ஒரு நாள் போட்டியில் 141 பந்துகள் மீதம் வைத்து வெற்றி பெற்றிருந்தது. அதேபோல் 3வது ஆட்டத்தில் 139 பந்துகள் மீதம் வைத்து இலக்கை எட்டியது.

இதன் மூலம் ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் முதல் முறையாக 100 பந்துகளுக்கு மேல் மீதம் வைத்து பாகிஸ்தான் அணி அடுத்தடுத்து இரு போட்டிகளில் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.